‘திராவிட மாடல்’ ஆட்சியில் 1931 புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன!

2554 புதிய ரேஷன் கடைகள் உருவாக்கப்பட்டுள்ளன!

சட்டப் பேரவையில் உறுப்பினரின் கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பெருமித பதில்!

சென்னை, பிப். 21- சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது உறுப்பினர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் இந்த 5 ஆண்டு கால ‘திராவிட மாடல்’ ஆட்சியில் 2554 புதிய ரேஷன் கடைகள் உருவாக்கப்பட்டுள்ளன என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

இதுகுறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

ச.சிவகுமார் : மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கீழ்மாம்பட்டு கிராமத்தில் உள்ள முழுநேர நியாய விலைக் கடை கட்டடத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் : விழுப்புரம் மாவட்டம், மயிலம் சட்டமன்றத் தொகுதி, வல்லம் ஒன்றியம், செஞ்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் கீழ்மாம்பட்டு கிராம நியாய விலைக் கடைக்கு தற்போது புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

உறுப்பினர் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விடை கிடைத்திருக்கிறது. இதுபோன்று பழுதடைந்த நிலையில் இருக்கக்கூடிய மேலும் சில கடைகளையெல்லாம் புதுப்பிக்க வேண்டும் அல்லது புதிய கட்டடங்களைக் கட்ட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நிச்சயமாக எதிர்காலத்தில் அதுகுறித்துப் பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

உறுப்பினர் அவர்கள் ஒரு நீண்ட பட்டியலைப் படித்து, இவைகள் அனைத்திற்கும் புதிய கடைகள் கட்டித் தர வேண்டுமென்றும், புதிய கடைகளை உருவாக்க வேண்டுமென்றும் கோரிக்கை வைத்திருக்கிறார். முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், மக்கள் நலனுக்காக இந்த அரசு என்று வழிநடத்துகின்ற முதலமைச்சர் அவர்கள், பொதுமக்களுடைய நலனுக்காக அவர்களுக்கு என்ன வசதிகள் தேவையோ அவற்றையெல்லாம் செய்து கொடுப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான், இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, ஏறத்தாழ புதிய கடைகளாக மட்டும் நம்முடைய துறையின் சார்பில் 1,931 புதிய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. புதிய கடைகள் உருவாக்கப்பட்டதைப் பொறுத்தவரை, 2,554 கடைகள் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, மக்களுடைய தேவைகளை அறிந்து அவை எதிர்காலத்தில் பூர்த்தி செய்யப்படும். வாய்ப்பிருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தாங்கள் இந்த மன்றத்தில் வைத்த கோரிக்கைகளை எழுத்துப்பூர்வமாகத் தந்தீர்களேயானால், துறைக்கு அனுப்பி, உரிய பதில்களைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஏதுவாக இருக்கும். குறிப்பாக ஒரே கடையில் 1,300-க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் இருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதையெல்லாம் செய்வதற்கு வாய்ப்புகள், சாத்தியம் இருக்கிறது. செய்து தரப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

ஒட்டப்பிடாரம் அக்காநாயக்கன்பட்டியில் அரசுப் பள்ளியில்

ரூ.8.70 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சமையலறை கட்டப்பட்டு வருகிறது!

சட்டப் பேரவையில் உறுப்பினர் எம்.சி.சண்முகையா கேள்விக்கு – அமைச்சர் கீதா ஜீவன் பதில்!

சென்னை, பிப. 21- சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது உறுப்பினர் எம்.சி. சண்முகையா கேட்ட கேள்வியும் அமைச்சர் கீதா ஜீவன் அளித்த பதிலும் வருமாறு:-

எம்.சி. சண்முகையா: ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், அக்காநாயக்கன்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் சமையலறைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

அமைச்சர் பி. கீதா ஜீவன் : ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், அக்காநாயக்கன்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் புதிதாக வைப்பறையுடன் கூடிய சமையலறை கட்டும் பணிக்காக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் நடப்பு நிதியாண்டில் ரூ.8,70,000/- ஒப்பளிக்கப்பட்டு, அப்பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. விரைவில் அக்கட்டடம் கட்டும் பணி நிறைவு பெற்றவுடன், அப்புதிய கட்டடத்தில் சத்துணவு மையம் செயல்படத் துவங்கும்.

எம்.சி. சண்முகையா: அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில், தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் மாப்பிள்ளையூரணி ஊராட்சியில் சமீரியாஸ் நகர், டேவிஸ்புரம், காந்தி நகர், காமராஜர்புரம் ஆகிய பகுதிகளில் அங்கன்வாடி மையங்கள் வாடகைக் கட்டடத்தில் செயல்படுகின்றன. ஆகவே, அப்பகுதி மக்களின் நலன் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கன்வாடிக் கட்டடம் அமைத்துத் தருவார்களா?

அமைச்சர் பி. கீதா ஜீவன்: உறுப்பினர் அவர்கள் அவரது தொகுதிக்குட்பட்ட மாப்பிள்ளையூரணி ஊராட்சிக்குட்பட்ட சமீரியாஸ்நகர், டேவிஸ்புரம், காமராஜர் நகர் உள்ளிட்ட பகுதிகளில் அங்கன்வாடி மையங்கள் வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. அவற்றுக்கு அரசு சொந்தக் கட்டடம் கட்டவேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். நிச்சயமாக அரசு அதை பரிசீலனை செய்து, உங்களுக்கு முன்னுரிமை அளித்து, இடம் தேர்ந்தெடுத்து, அரசு சொந்தக் கட்டடம் நிச்சயமாக கட்டித் தரப்படும்!

எம்.சி. சண்முகையா: கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், செக்காரக்குடி, கலியாவூர், பொட்டலூரணி, வசவபுரம், திருவேங்கடபுரம் ஆகிய பகுதிகளில் அங்கன்வாடி மையங்கள் வாடகைக் கட்டடத்தில் தான் இயங்கி வருகின்றன. ஆகவே, அப்பகுதி மக்களின் நலன் கருதி, அந்தப் பகுதிகளிலும் அங்கன்வாடி கட்டடங்கள் அமைத்துத் தருவார்களா?

அமைச்சர் பி. கீதா ஜீவன்: அவருடைய தொகுதியிலுள்ள எல்லா கிராமங்களுக்கும் கேட்டு விடலாம் என்பது உறுப்பினருடைய நல்லெண்ணம். ஒட்டப்பிடாரம் தொகுதிக்குட்பட்ட கருங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் செக்காரக்குடி, பொட்டலூரணி, வசவபுரம் உள்ளிட்ட கிராமங்களிலும், உறுப்பினர் அவர்கள் இன்று குறிப்பிட்ட மற்ற 2, 3 கிராமங்களில் உள்ள வாடகைக் கட்டடங்களுக்கும், அரசு நிச்சயமாக சொந்தக் கட்டடம் கட்டித் தரும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

இந்த நாட்டில் சட்டத்தின் ஆட்சி நிலைத்திருப்பதற்கு

முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியே 2026இல் தொடரும்!

சட்டப் பேரவையில் விளாத்திகுளம் – ஜி.வி.மார்க்கண்டேயன் பேச்சு!

சென்னை, பிப். 21- சட்டப் பேரவையில் இடைக்கால நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தில் விளாத்தி குளம் தொகுதி உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன் பேசுகையில், இந்த நாட்டில் சட்டத்தின் ஆட்சி நிலைத்திருப்பதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலினின் திராவிட மாடல் ஆட்சியே 2026இல் தொடரும் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

சட்டப் பேரவையில் விளாத்திகுளம் தொகுதி உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன் பேசியதாவது:-

2026-2027 ஆம் ஆண்டிற்கான இடைகால நிதி நிலை அறிக்கையினுடைய விவாதத்தில், விளாத்தி குளம் சட்டமன்றத் தொகுதியின் சார்பாகத் தேர்வு செய்யப்பட்ட என்னை, பேசுவதற்கான வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கும், என்னைத் தேர்வு செய்திட்ட விளாத்தி குளம் மக்களுக்கும், முதன் முதலாக முதலமைச்சர் தளபதி அவர்களிடம் 2020 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 9 ஆம் தேதி, தலைவர்தான் எதிர்கால இந்தியாவை கட்டமைக்கக்கூடிய ஒரு தலைவர்; அவருக்குப் பின்னால் நீங்கள் எல்லோரும் பணி செய்ய வேண்டுமென்று என்னை அழைத்து, அவர் கரத்தில் என்னை ஒப்படைத்த நகர்ப்புற வளர்ச்சித் துறை யினுடைய அமைச்சர், குடிநீர் வழங்கல் துறையினுடைய அமைச்சர் திரு. நேரு அவர்களுக்கும், இங்கு சிறந்த முறையில் நிதி நிலை அறிக்கையையும், வேளாண் நிதிநிலை அறிக்கையையும் தாக்கல் செய்து அமர்ந்திருக்கிற நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களுக்கும், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், இந்த சட்டமன்றம், இந்த நாட்டில் எது நடக்க விரும்புகிறதோ, அதை இந்த அரசின் செவியாகவும், விழியாகவும் நாடாளுமன்றத்தில் செயல்படுத்திக் கொண்டிருக்கிற எங்கள் ஆற்றல்மிக்க நாடாளுமன்ற குழுவினுடைய தலைவர் திருமதி கனிமொழி கருணாநிதி அவர்களுக்கும், எங்கள்மாவட்டத்தினுடைய அமைச்சர்கள் சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் மற்றும் மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உட்பட அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், பார்வையாளர்கள் மாடத்தில் இருப்பவர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும், எங்கள் விளாத்தி குளம் சட்டமன்றத் தொகுதியினுடைய வாக்காள பெருமக்களுக்கும் நான் நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானங்கள்!

இதை ஒரு நிதிநிலை அறிக்கை, வேளாண் நிதி நிலை அறிக்கை மீதான பொது விவாதம் என்பதைவிட, 5 ஆண்டுக் காலத்தில் இந்த ஆட்சியை சீர்தூக்கி பார்க்கின்ற பெரிய வாய்ப்பாகவே நான் கருதுகிறேன். முதலமைச்சரின் தலைமையின்கீழ் அமைந்திருக்கின்ற இந்த சட்டப்பேரவை வரலாற்று சிறப்புமிக்க தீர்மானங்களையெல்லாம் இந்த 5 ஆண்டு காலத்தில் நிறைவேற்றியிருக்கின்றது. Artcile 370 abolish செய்யப்படுகிற போது, இதே சட்டப்பேரவையில், Indian Constitution eradicate செய்துவிடப் போகிறது என்பதை அச்சத்தில் வைத்து, அரசியல் சாசனம் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதற்காக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார் முதலமைச்சர் அவர்கள். இந்த நாட்டில் ஜனாதிபதி, துணை ஜனாதிபதி ஆகியோர் தேர்வு செய்யப்படுகிறார்கள். ஆனால், ஒவ்வொரு மாநிலத்திலும் மக்களால் தேர்வு செய்யப்படாத ஆளுநர் அவர்கள், நியமனம் செய்யப்படுகிறார். நியமனம் செய்யப்படுகிற ஆளுநருக்கு எவ்வளவு அதிகாரவரம்பு இருக்க வேண்டும் என்பதை நிர்ணயம் செய்வதற்காக கடிவாளம் போட்டு காண்பிக்கும் அளவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இங்கு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார். அந்தத் தீர்மானம்தான் உச்ச நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, Governor துணை வேந்தர்களை நியமிக்கக் கூடிய அதிகாரத்திற்கு தடை விதிக்கப்பட்டு, அனைத்து முதலமைச்சர்களும் மக்களால் தேர்வு செய்யப்பட்டவர்கள்; துணை வேந்தர்களை நியமிக்கலாம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இன்று வழக்கு உச்ச நீதி மன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. உடனடியாக இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு, உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பை இடைக்காலத்தில் கொடுத்தாலும்கூட, உச்ச நீதிமன்றத்தில் வழுவாமல் இருக்கக்கூடிய அளவிற்கு நிலைத்தன்மை பெற்ற ஒரு தீர்மானத்தை முதல மைச்சர் அவர்கள் இதே அவையில் உருவாக்கி கொடுத்த காரணத்தினால்தான். இன்றையதினம், ஒன்றிய-மாநில உறவுகள் குறித்த ஓர் உயர்நிலைக் குழுவினுடைய புத்தகம் ஒன்று எங்கள் கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனை நான் வரலாற்று பொக்கிஷமாகக் கருதுகிறேன்.

இந்த நாட்டில் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் நிதி பரிபாலணம் செய்து ஒதுக்குகிற போது, தொல்லியல் துறையை அவர் கரத்தில் வைத்திருக்கிறார். இந்தத் தமிழும், தமிழ் சார்ந்த நம்முடைய புரதான சின்னங்களும், சிவகளையும், நம்முடைய ஆதிச்சநல்லூரும், நம்முடைய பட்டிணமருதூர், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதியில் வந்திருக்கிறது. இவற்றையெல்லாம் அகழ்வாராய்ச்சி செய்கிற போது, பொருநை அருங்காட்சியகத்திற்கு நிதி, இன்று பல்வேறு கட்டமைப்புகளை நம் நிதியமைச்சர் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார். நம்முடைய கலாச்சாரத்தை பாதுகாப்பதற்கு, நம்முடைய மொழியை பாதுகாப்பதற்கு, நம்முடைய பண்பாட்டை பாதுகாப்பதற்கு, இந்த ஒன்றிய-மாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழு, நிதி பரிபாலணம் என்பதைவிட நிதி நமக்கு எவ்வளவு கிடைக்கிறது?



இன்று பல்வேறு எதிர்க்கட்சியைச் சார்ந்த தலைவர்கள் எல்லாம் பேசினார்கள். முன்னாள் அமைச்சர், சட்டப்பேரவை உறுப்பினர் கே.பி. முனுசாமி அவர்களும் பேசினார்கள். ஆனால் ஒரு விஷயத்தை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். 3,400 கோடி ரூபாய் சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின்கீழ் ஒன்றிய அரசு நமக்கு நிதி கொடுக்க மறுத்துவிட்டது. ஆனால், இந்த அரசு பெருந்தலைவர் காமராசர் காலத்தில் கட்டப்பட்ட பள்ளிக்கூடங்களுக்குப் பிறகு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள், பொதுப் பணித் துறையின்மூலம் கையாளப்படுகிற உயர்நிலை, மேல்நிலை பள்ளிக்கூடங்களுக்கு வருடத்திற்கு ரூ.3,000 கோடி, ரூ.4,000 கோடி கட்டடங்களுக்கு மட்டும் நிதி ஒதுக்கப்பட்டு, அனைத்து பள்ளிகளுக்கும் இரண்டு வகுப்பறை கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஒன்றிய அரசு நிதி கொடுக்கவில்லை. ஆனால் நிதிபரிபாலணத்தை சிறப்பாக செய்கிற நம்முடைய முதல்வர் அவர்கள் நமக்கு எதை கொடுத்திருக்கிறார், எல்லோருக்கும் school building கொடுத்திருக்கிறார். அடுத்து சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கு தேர்வு செய்யப்பட்டு வருகிறபோது எங்கள் ஊரில் தொடக்கப் பள்ளி இருக்கிறது, எங்கள் ஊரில் நடுநிலைப் பள்ளி இருக்கிறது, எங்கள் ஊரில் உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. எங்கள் குழந்தைகள் மரத்தடியில் இருக்கிறார்கள், எங்களுக்கு lab வசதியில்லை என்ற கேள்விக்கே இடமில்லை. இந்த ஐந்தாண்டு காலத்திற்குள் அனைத்து பள்ளிகளிலும் கட்டடங்களும், compound walls மற்றும் sanitary complex கட்டி முடிக்கப்பட்டு தன்னிறைவான ஒரு சுகாதாரமான இனிமையான கல்வியை இந்த நாட்டு மக்களுக்கு கொடுக்கக்கூடிய நல்லாட்சியை செய்திருக்கிறோம்.

மாநில அரசு தனித்துவமாக இயங்க வேண்டும்!

ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய தனித்தன்மையை நாம் எங்கு பார்க்க வேண்டுமென்று சொன்னால், ஒன்றிய அரசு, நாம் எதில் பாதிக்கப்பட்டிருக்கிறோம், எதில் நம் விலங்குகள் பூட்டப்பட்டிருக்கின்றன, எதில் நமக்கு உறவுகள் குறைவாக இருக்கிறது, எந்த சுதந்திரம் நமக்கு பாதிக்கப்பட்டுவிடக் கூடாது அதையெல்லாம் ஒன்றிய அரசிடமிருந்து மாநில அரசு தனித்துவமாக இயங்க வேண்டும் என்பதிலே ஆணித்தரமாக பல்வேறு தீர்மானங்களை இந்த சட்டமன்றத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

அதில் ஒருபகுதியாகத்தான் ஐந்தாண்டு காலத்தில், நம்முடைய கடலூர் மாவட்டத்தில் வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சராக இருக்கிற எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் பெருமிதத்தோடு பேசினார்கள். நாங்கள் ஐந்தாண்டு காலம் வேளாண்மை நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய்திருக்கிறோம். ஆறாவது முறையாக இடைக்கால வேளாண்மை நிதிநிலை அறிக்கையாக அதை நான் தாக்கல் செய்கிறேன் என்று. வேளாண்மை என்பது இரசாயனமாகி விடக்கூடாது. ஆனால் அதில் இயந்திரமாக்கல் வேண்டும் என்பதை, இயந்திரமாக்கினால்தான் உற்பத்தியினுடைய அளவை கூட்டமுடியும். அந்தவகையில் வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் நாடு முழுவதும் 50% subsidy-ல் டிராக்டர்களை அள்ளிக் கொடுத்திருக்கிறார். pesticides அடிப்பதற்கான drones கொடுத்திருக்கிறார், rotavator கொடுத்திருக்கிறார், cono weeder கொடுத்திருக்கிறார். Tractor, harvester என்று வேளாண்மையை இயந்திரமாக்கிய மாபெரும் ஆட்சி தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சி.

இதேநேரத்தில் நம்முடைய வேளாண்மைத் துறை, அங்கக வேளாண்மை. நம்மாழ்வர் அவர்களுடைய பெயரை பயன்படுத்தி இந்த நாட்டில், இந்த மண் காக்கப்பட வேண்டும். இந்த மண் உயிருள்ள மண்ணாக இருக்க வேண்டுமென்று நம்முடைய விவசாயிகள் அதில் அதிநவீனமயமான drip irrigation, tube irrigation இவற்றிலிருந்து எல்லாம் நாம் முன்னேற்றம் அடைந்துவிட்டு, நம்முடைய இரசாயன ஒழிப்பை நாம் எவ்வாறு அதில் கையகப்படுத்த வேண்டும் என்பதற்காக, அதற்கென்று கோயம்புத்தூரில் வேளாண்மைப் பல்கலைகழகத்தில் தனி desk ஆரம்பித்து. . .

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரைக்கும் எங்கள் ஊர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் விளாத்தி குளத்திற்கு வந்து, பார்த்தபோது சொன்னார். இந்த விளாத்திகுளத்திற்கு எதிரே 380 ஏக்கரில் இந்தக் குளம் இருக்கிறது. இந்த ஒரு குளத்தை உங்களுக்கு ஆழப்படுத்தி கொடுத்துவிட்டால் இந்த ஊருக்கெல்லாம் தண்ணீர் கிடைத்து விடும் என்று நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார். நான் கேட்கிறேன் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒரு குளத்தை நீங்கள் ஆழப்படுத்திக் கொடுக்க வேண்டும். அதை reservoir-ஆக நீங்கள் மாற்றிக் கொடுக்க வேண்டும். எங்கள் ஊர் rainfed ஆக இருக்கிறது. எங்கள் ஊரில் உள்ள விவசாயிகள் ஒவ்வொரு முறையும் மழை பொய்க்கின்றபொழுது, மிகப்பெரிய கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். 50% harvest yield calculate செய்துவிட்டால் insurance மறுக்கப்படுகிறது. இதில் ஒன்றிய அரசினுடைய சட்டம் தடங்கலாக இருக்கிறது. ஐந்து வருடத்திற்குள் இருக்கிற average yield-ஐப் பார்த்துதான் insurance-க்கு பணம் கொடுப்பார்கள் என்று சொன்னால், இந்த வருடத்திற்கு insurance கட்டுகிற நாம் மிளகாய்க்கு 1,500 ரூபாய் கட்டுகிறோம். மக்காச்சோளத்திற்கு ரூ.200 கட்டுகிறோம். மற்ற pulses, minor millets எல்லாம்

பணம் கட்டுகிறோம். இந்த ஆண்டு மழை பொய்த்துவிட்டால் 50 சதவிகிதத்திற்கு average-க்குகீழ் yield வந்தால் இந்த வருடம் நமக்கு என்ன செய்ய வேண்டும், insurance கொடுக்க வேண்டும்.

ஒருவர் car-ல் போய்க் கொண்டிருக்கிறார். இதை நன்றாக கேட்க வேண்டும். accident ஆகிவிட்டார். இந்த ரோட்டில் எத்தனை நபர்கள் 5 வருடங்களில் accident ஆகியிருக்கிறார்கள் என்று பார்த்தபிறகா insurance claim கொடுக்கிறார்கள். ஏன் farmers-ஐ மட்டும் இந்தளவிற்கு தொல்லை செய்ய வேண்டும். நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் இதே கேள்வியை நாடாளுமன்றத்தில் கேட்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் மீண்டும் முதலமைச்சராக வரவேண்டும். இந்த அவையிலே வேளாண்மை தொடர்புடைய அத்தனை நபர்களுக்கும் அந்தந்த ஆண்டு காலமே insurance-ஐ கொடுக்கக்கூடிய அளவிற்கு புதிய சட்டத்தை தமிழ்நாடு சட்டப்பேரவையிலே நிறைவேற்றி, அதற்கும் நீதிமன்ற பரிகாரத்தை பெற்றுக்கொடுத்து, ஒன்றிய அரசிடமிருந்து அந்தப் பணத்தை வசூல் செய்து விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டுமென்று அன்புடன் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் ஏக்கரில் எங்கள் தொகுதியில் வேளாண்மை செய்து கொண்டிருக்கிறார்கள். முழுவதும் rain fed irrigation-தான்; இந்த 3 ½ இலட்சம் ஏக்கம் விவசாயம் செய்யக்கூடிய மக்கள் மூன்று ஆண்டுக்கு ஒருமுறை, இரண்டுமுறை மழை பொய்த்து விடுகிறது.

அனைத்துப் பணிகளையும் செய்திருக்கிற அவர்களுக்கு நம்முடைய அரசு முதலமைச்சர் அவர்கள் இந்தாண்டு எங்களுக்கு average rain-ஐவிட 80 percent fail ஆகிவிட்டது. எங்களுக்கு ஒரு ஏக்கருக்கு விளாத்திகுளம் சட்டப் பேரவைத் தொகுதி, தூத்துக்குடி மாவட்டத்தில் 3 தொகுதியில் தாமிரபரணி இருக்கிறது. மீதியிருக்கக்கூடிய இந்த கோவில்பட்டி, விளாத்திகுளம், ராமநாதபுரம் பகுதியை ஒட்டியிருக்கக்கூடிய பகுதிகளில் எல்லாம் மழை failure ஆகிவிட்டது. எங்கள் தொகுதியின் பக்கத்தில் திருநெல்வேலி இருக்கிறது. நெல்லே வேலியாக திருநெல்வேலிக்கு இருந்தது. தங்கமே தமிழக்கில்லை தட்டுப்பாடு எங்களுடைய தங்கம் தமிழ்நாட்டினுடைய நிதியமைச்சராக இருக்கிறார், என் தொகுதிக்கு பக்கத்து தொகுதியில் இருக்கிறார்.

இந்த வானம் எப்படி பொய்த்திருக்கிறது என்பதை நீங்கள் முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச்சொல்லி, உங்களுக்கென்று வாய்ப்பு இருக்கிறது அந்த மானாவாரி பகுதியில் இருக்கக்கூடிய வேளாண்குடி மக்களுக்கெல்லாம் ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் பணம் கொடுக்க வேண்டுமென்று வேளாண்குடி மக்களின் சார்பாக என்னுடைய கருத்தைப் பதிய வைத்து, இந்த நிதிநிலை அறிக்கையும், வேளாண்மை நிதி நிலை அறிக்கையும் மிகச் சிறப்பாக தாக்கல் செய்யப்பட்டு, ஸ்டாலின் ஆட்சி தொடரட்டும் இந்தியாவினுடைய மதச்சார்பின்மை காக்கட்டும், இந்த நாடு மதச்சார்பின்மையா? இந்த நாடு மதத்திற்கு உட்பட்டவர்கள் ஆட்சி செய்யக்கூடியதா? மதம் ஆட்சி செய்யலாமா? சட்டம்தான் ஆட்சி செய்யவேண்டும். சட்டத்தின் ஆட்சி இந்த நாட்டில் நிலைநிறுத்துவதற்கு ஸ்டாலின் கரம் உயர்ந்து நிற்கும். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அவர் பேசினார்.